## நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகம் - 2016

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன 11ம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆர்தர் சீ கிளார்க் நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிறகான பணிக்கொடைக் கொடுப்பனவு ரூபா 171,000 தொகை எனினும் செயற்பாட்டு விடயங்கள் மூலமான காசுப் பாய்ச்சலை கணிக்கும் போது அதனை ரூபா 201,000 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது மூலதன மானியங்கள் என திறைசேரியில் இருந்து ரூபா 79,043,000 தொகை கிடைத்திருந் போதிலும் நிதி செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சலினை கணிக்கும் போது அதனை ரூபா 85,433,000 தொகை என காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

வருமானங்களை கணக்கீடு செய்யும் போது அட்டுறு முறையினை கடைபிடித்தல் நிறுவனத்தின் கணக்கீட்டு கொள்கை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த போதிலும், உத்தியோகத்தர்களுக்கு விநியோகிப்பதில் அடங்கும் 19 வருமான கருத்திட்டங்கள் தொடர்பாக 2014, 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது இண்வொயிஸ் பண்ணப்பட்ட கூட்டுதொகை ரூபா 1,504,800 இற்கான வருமானம் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான செயலாற்றுகைக் கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு பதிலாக, பிற்போடப்பட்ட வருமானங்கள் என நிதி நிலைமைக்கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 453,295 தொகை கிரயத்தையுடைய அலுவலக உபகரணங்களின் திரண்ட பெறுமானத் தேய்வு ஒதுக்கம் ரூபா 91,637 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்த காரணத்தினால் பண்ட விற்பனவு மூலம் இலாபம் ரூபா 91,637 தொகை மிகையாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்குச் சேவைகள் வழங்கியது தொடர்பாக மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,035,657 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) தேயிலை வர்ணங்களைத் தரப்படுத்தும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் ஆய்வு செயற்திட்டத்திற்காக 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 4,209,066 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 1,102,586 தொகை ஆய்வுச் செலவுகள் என கணக்கீடு செய்வதற்கு பதிலாக நடைபெறு வேலை என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ஆய்வு செயற்திட்டங்கள் தொடர்பாக செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது தொடர்பாக நேரிட்டுள்ள செலவுகள் ரூபா 9,234,889 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி செலவுகள் என மற்றும் மூலதன மானியத்தைப் பயன்படுத்துவதை வருமானம் எனக் காட்டுவதற்கு பதிலாக, அப் பணத்தின் உரிமைகள் மாற்றக் கூற்றில் மூலதன மானியங்களில் இருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.3 பெற வேண்டிய பற்று செலுத்த வேண்டிய மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டங்கள் மற்றும் பாடநெறிகள் நடாத்துதல் தொடர்பாக மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய ரூபா 8,986,777 இற்கான மீதியில் ரூபா 4,178,088 தொகை, 2017 நவம்பர் மாதம் வரை அறவீடு செய்திருக்காததுடன் அவற்றில் 02 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,586,990 தொகை ஆக இருந்தது.

(ஆ) 3 நபர்களிடமிருந்து மற்றும் 4 வெளிநிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய 3 வருடங்களை மிகைத்திருந்த ரூபா 222,270 இற்கான மீதிகளை அறவீடு செய்வதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வெளிதரப்பினருக்கு செலுத்த வேண்டியிருந்த 3 வருடங்களை விட மிகையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,877,338 தொகையாக காணப்பட்டதுடன் இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த ரூபா 195,150 தொகை பெறுமதியான 4 முற்பணங்களை மீளாய்வாண்டு இறுதிவரை தீர்த்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | | | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவை | | |
| | i. | VII ஆம் அத்தியாயம் 10 ஆம் பிரிவு மற்றும் 2013 அக்டோபர் 07 ஆம் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் 2 (அ) மற்றும் (ஆ) | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் இன்றி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரினால் விடுமுறை நாட்களில் கடமையாற்றியதற்காக மீளாய்வண்டின் போது 22 விடுமுறை நாட்களுக்காக விடுமுறை நாள் சம்பளம் என ரூபா 81,620 தொகை பெற்றிருந்தார். |
| | ii. | VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவு | பதில் கடமையாற்றும் பதவி ஒன்றிற்கான கொடுப்பனவு செய்யும் போது பதில் கடமையாற்றும் பதவியின் ஆரம்ப சம்பளத்தில் 25 சதவீதம் மாத்திரம் செலுத்தப்பட வேண்டும் எனினும் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் பதவியில் பதில் கடமையாற்றியதற்கான படி செலுத்துவற்கு பதிலாக 2015 மே முதல் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 2,778,116 தொகை செலுத்தியிருந்தமையால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு பதில் கடமைக்காக உரித்தான படியை விட ரூபா 2,214,602 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2000 ஜனவரி 19 திகதிய 380 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கை | | சுற்றறிக்கையின் மூலம் அணவல் செய்யப்படாத பற்றறி பரிசோதனை, RCCB பரிசோதனை ஆகிய செயற்திட்டங்கள் ஊடாக கிடைக்கும் வருமானத்தின் மிகையினை அதனோடு தொடர்புடைய நேர் மற்றும் மறை பதவியணியினருக்கு பங்கீடு செய்யப்படலாகாது எனினும் மீளாய்வாண்டின் போது அவ் வருமானத்தில் ரூபா 831,897 தொகை பதவியணியினருக்கு பங்கீடு செய்யப்பட்டிருநதது. |

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறவனத்தின் நிதி விளைவுகள் ரூபா 15,287,030 இற்கான பற்றாக்குறையொன்றினை காட்டியதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 9,511,887 தொகையாகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 24,798,917 இற்கான வீழ்ச்சியொன்று காணக்கூடியதாக இருந்தது. மீளாய்வாண்டின் போது மீண்டுவரும் மானியங்கள் பெறுவனவு ரூபா 18,622,000 இனால் குறைவடைதல் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 5,830,487 இனால் அதிகரித்தல் மேற்கூறிய நிதி விளைவுகளின் வீழ்ச்சிக்கு முக்கியமாக தாக்கியிருந்தது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிவிளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 18,679,669 இற்கான மிகை 2015 ஆம் ஆண்டளவில் ரூபா 9,511,887 தொகை வரை குறைவடைந்ததுடன் 2016 ஆண்டின் போது ரூபா 15,287,030 இற்கான பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு மீண்டும் சீராக்கல் செய்த போது 2012 ஆண்டின் போது ரூபா 77,249,669 தொகைக்கான நிறுவனத்தின் பங்களிப்பு 2016 வருட இறுதி அளவில் ரூபா 90,296,226 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்த போதிலும், 2015 ஆண்டிற்கு நேரொப்ப 10 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் 22 ஆம் பந்தியின் பிரகாரம், நிறுவனத்தின் பங்களிப்பானது நவீன தொழில்நுடட்பத்தை அறிமுகப்படுத்துவதை விரைவாக்குவதற்காக நவீன தொழில்நுட்பங்களை பிரயோகப்படுத்துவதற்காக ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை ஆரம்பித்தல் மற்றும் பேணல், அரச மற்றும் தனியார் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் விடயங்களில் நவீன தொழில்நுட்பம் தொடர்பாக ஆட்களை பயிற்றுவித்தல் மற்றும் எதிர்கால ஆய்வு விடயங்களை மேம்படுத்துதல் ஆக இருந்த போதிலும் நிறுவனத்தின் செயலாற்றுகை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்ட போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) தேயிலையின் வர்ணத்தை தரப்படுத்தும் இயந்திரத்தை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்**

(i) தேயிலை வர்ணத்தை தரப்படுத்துவதற்கான குறைந்த கிரயத்தில் இயந்திரம் ஒன்றினை உற்பத்தி செய்யும் ஆய்வு செயற்திட்டம் ஒன்று 2012 ஆண்டின் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டிய காலம் ஒவ்வொரு வருடத்திலும் செயற்பட வேண்டிய பங்களிப்பு என்பன தொடர்பான திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் 2016 ஆண்டு இறுதி வரையும் இயந்திரத்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் ரூபா 4,209,066 தொகை ஆக இருந்தது.

(ii) இந்த ஆய்வு செயற்திட்டத்தின் மூலம் உள்ளுர் தேயிலைக் கைத்தொழிலுக்கு நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கும் முறை, தற்போது சந்தையில் காணப்படும் இயந்திரங்களை விட இதன் மூலம் எதிர்பார்க்கும் விஷேட பண்புகள், எதிர்ப்பார்க்கும் சந்தை, எதிர்பார்க்கும் கிரயம் மற்றும் தேயிலை கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக பங்களிப்பு செய்யும் முறை எவ்வாறு என்பவற்றை காட்டக்கூடிய விதமாக முன்சாத்திக்கூறு அறிக்கை ஒன்று செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தயாரித்திருக்கவில்லை.

(iii) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் பிரகாரம் நவீன தொழிநுட்பம் என்பதில் இலத்திரனியலும் அடங்குகின்றன எனினும் நிறுவனத்தில் இலத்திரனியல் பிரிவு ஒன்றும் நிறுவப்பட்டிருந்தது. எனினும், இலத்திரனியலை முன்னேற்றுவதற்காக தேவையான விஷேடத்துவ அறிவு நிறுவனத்தில் காணப்படவில்லை என குறிப்பிட்டு மேற்கூறிய செயற்திட்டத்தை தொடர்ந்து நடாத்துவதற்காக 2016 மார்ச் மாதத்தின் போது தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 8,000,000 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் அளவில் அதாவது IV ஆவது கட்ட வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனினும், 1 கட்ட வேலை மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

**(ஆ) தொல்பொருள் தேடுதல்களுக்காக மற்றும் அகழ்தலுக்காக நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்**

தொல்பொருளியல் திணைக்களத்திற்காக தொல்பொருள் தேடுதல்கள் மற்றும் அகழ்தல் விடயங்களுக்காக நிழற்பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் ரூபா 10,564,677 தொகை பெறுமதியில் ஓட்டுநர் இன்றிய விமானம் ஒன்று 2016 ஆகஸ்ட் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. விமானத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் அதை செயற்படுத்துவது தொடர்பாக ரூபா 110,322 இற்கான செலவு ஒன்று செலவிடப்பட்டு இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு பயிற்சி ஒன்றும் வழங்கியிருந்த போதிலும் நவம்பர் 30 முதலாவதாக விமானத்தை வானில் பறக்கவிடப்பட்ட போது விமானம் சேதமடைந்திருந்தது. உற்பத்தி செய்யப்பட்ட நாட்டிற்கு அனுப்பி விமானத்தை அதனைப் பழுதுபார்த்திருந்த போதிலும் 2017 அக்டோபர் 30 திகதி வரையும் செயற்படுத்தக் கூடிய நிலையில் காணப்படவில்லை என பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

(அ) நிறுவனத்திற்குச் சொந்தமான தொலைதொடர்பு கோபுரம், இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு வாடகைக்கு கொடுப்பது தொடர்பாக நிறுவனத்தினால் இலங்கை தொலைதொடர்பு ஒழுங்குபடுதல் ஆணைக்குழுவுடன் 2013 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த உடன்படிக்கை 2015 ஜனவரி 31 திகதி முடிவடைந்திருந்தது. எனினும் குறிப்பிட்ட வாடகை உடன்படிக்கையினை காலநீடிப்பு செய்யாமல் 2015 பெப்ரவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரை பயன்படுத்தியிருந்ததுடன் அது தொடர்பாக நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 638,134 வாடகை ஒன்று அறவிடப்படவேண்டியிருந்தது.

மேலும் 2015 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 2017 ஜூலை 31 திகதியில் முடிவடைந்த 02 வருட காலப்பகுதிக்காக உடன்படிக்கை கையொப்பமிட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டிய வாடகை ரூபா 2,079,768 தொகையினை 2017 நவம்பர் 30 திகதி வரை அறவீடு செய்திருக்கவில்லை.

**(ஆ) புவி அவதானிப்பு தரவுகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் தொடர்பாக தேசிய மத்திய நிலையம்**

நாட்டின் அபிவிருத்திக்காக விண்வெளித் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக சீன அரசாங்கத்தின் பங்களிப்புடன் செயற்கைக் கோள் மத்திய நிலையமொன்று நிறுவும் செயற்திட்டமொன்று முன் சாத்தியக்கூறு ஆய்வு ஒன்று இன்றி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சீன முகவர் நிலையத்துடனான புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மத்திய நிலையமொன்று நிறுவுவதற்கு பொருத்தமான காணியொன்று தெரிவு செய்யும் போது இரு சாராரும் பங்குபற்ற வேண்டுமெனினும் சீன முகவர் நிலையத்தின் பங்கு பற்றல் இன்றி நிறுவனத்தின் தற்றுணியின் பிரகாரம் காணியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்தது. எனினும், சீன முகவர் நிலையத்தினால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு சுற்றுலாக்களின் போது அக்காணி செயற்திட்டத்திற்கு பொருத்தமற்ற காரணத்தினால் செயற்திட்டத்திற்காக வேறு காணியொன்று தேடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், நிறுவனத்தினால் அந்த காணியை சுற்றி வேலி ஒன்று நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 16 ஆம் திகதி ரூபா 3,545,744 இற்கான தொகையொன்று நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்தியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 நவம்பர் மாதம் அளவில் குறிப்பிட்ட வேலி நிர்மாணிக்கப்பட்டிருக்காமையால் அப்பணத்தை திருப்பி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆண்டு முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்ட ரூபா 4,091,099 தொகை கிரயத்தையுடைய இருப்புகளில் பயன்படுத்த முடியாத இருப்பு மற்றும் மெதுவாக அசையும் சொத்துக்களை இனங்கண்டு அகற்றுவதற்காக அல்லது நிதிக்கூற்றுகளில் ஒதுக்கங்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருந்த வாகன விபத்து ஒன்றின் மூலம் ஏற்பட்டிருந்த ரூபா 50,063 இற்கான நட்டத்தை சாரதியிடம் அறவிடப்பட வேண்டும் என ஆரம்ப விசாரணையின் போது விதைந்துரைந்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2017 ஆகஸ்ட் வரை அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியின் 177 ஆக இருந்த போதிலும், உள்ளவாறான பதவியணி 91 ஆக காணப்பட்டமையால் 86 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளபடுகின்றன

(அ) மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு 29 பதவிகளில் காணப்பட்ட 96 வெற்றிடங்களில் 9 இற்கான பதவி வெற்றிடங்களை நிறப்புவதற்கு மாத்திரம் பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 02 பதவிகளில் 8 வெற்றிடங்களுக்காக மாத்திரம் ஆள் சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விவகாரங்களை நிறைவேற்றும் குறிக்கோளுடன் செயற்படும் இந்த நிறுவனம் நுண் இலத்திரனியல், தொலைதொடர்பு, தகவல் தொழிநுட்பம், விண்வெளி தொழிநுட்பம், ரோபோ விஞ்ஞானம் பற்றிய மற்றும் நவீன தொழில்நுட்ப விடயம் மீதான மற்றும் ஏனைய தொடர்புடைய பரப்புகளில்

விஷேடத்துவமுடைய முன்னடைவுள்ள நிறுவனமுமாகும். அந்த பரப்புக்களுக்கு நேரடியாக தொடர்புடைய உத்தியோகத்தர்களின் அடங்கிய 34 பதவிகளில் 70 வெற்றிடங்கள் காணப்படல் நிறுவனத்தினால் எதிர்பார்த்த குறிக்கோளை நோக்கி நெருங்குவதற்கு பாதிக்கக் கூடியதாக இருப்பதனால் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக காணப்படும் சிக்கல்களை மீளாய்வு செய்து அச்சிக்கல்களை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக்கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் 13.3 பிரிவின் பிரகாரம் பதில் கடமை நியமனம் ஒன்று செய்யப்பட வேண்டியது நிரந்தர நியமனம் ஒன்று செய்யும் வரை தற்காலிக பரிகாரம் ஒன்றாக மாத்திரம் ஆக இருந்ததுடன், பதவிக்கு முழு நேர அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவரின் சேவை தேவையெனின் நிரந்தர நியமனம் ஒன்று தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டும் எனினும் 2013 மற்றும் 2015 ஆண்டுகள் முதல் பதில் கடமை நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த 4 சிரேஷ்ட பிரதி பணிப்பாளர் பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக 2017 மே 30 திகதி வரையும் நடவடிக்கை எடுத்தருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கை திட்டம்

(அ) 2016 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த 77 செயற்பாடுகளில் 25 தவிர ஏனைய ஒவ்வொரு செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என காட்டப்பட்டிருக்காததுடன் வருட இறுதி செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்த போது உண்மையாக செலவிடப்பட்ட தொகை எவ்வளவு என செயற்திட்டங்கள் எதிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒவ்வொரு செயற்திட்டத்தின் மூலமும் ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த தொகை மற்றும் முன்னேற்றத்தை மீளாய்வு செய்த போது பௌதீக முன்னேற்றத்தை சதவீதப்படி மதிப்பாய்வு மேற்கொள்வதன் மூலம் நடைபெறு ஆண்டின் போது நிறுவனத்தின் நிதி கிரயத்திற்கு நேரொப்ப முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்வதற்கும் தொடர்ந்து வரும் ஆண்டின் செயற்பாடுகளை சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும் வசதியாக இருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளில் அவ்வாறு காட்டப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த மதிப்பீட்டு பெறுமதி ரூபா 24,064,881 தொகைக்கான பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக 60 பெறுகைகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்த காரணத்தினால் 2016 ஆண்டின் போது பெறுகைகள் திட்டத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 20,910,419 தொகைக்கான மதிப்பீட்டுப் பெறுமதியையுடைய 14 பெறுகைகள் 2016 ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் பெறுகைகள் செயற்பாடுகள் வினைதிறனுடன் திட்டமிடப்பட்டிருந்தனவா என கணக்காய்வில் சிக்கல் தன்மை காணப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| | ------------------------------------------ | | ------------------------- |
| (அ) | மனிதவள முகாமைத்துவம் | (i) | விடுமுறை நாட்களில் கடமையாற்றுவதற்கு முன்னர் அதற்கான அங்கீகாரம் பெற வேண்டும் எனினும் கடமையாற்றிய நாளைக்கு பின்னர் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தல் |
| | | (ii) | உள்வருதல் வெளிச் செல்லல் பதிவேட்டின் பிரகாரம் குறிப்பிட்ட தினத்தில் உள்வருதல் மற்றும் வெளிச்செல்லல் சரியானவை என அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்படாமை. |
| (ஆ) | நிதிக் கட்டுப்பாடு | (i) | விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்காக படிகள் செலுத்தும் போது ‘‘செலுத்தப்பட்டது’’ என குறிப்பிடப்பட்டு மீண்டும் அக் கொள்வனவு செய்யப்படமாட்டாது என உறுதிப்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | விடுமுறை நாட்களில் வேலை செய்வதற்கான படிகளுக்காக விண்ணப்பிக்கும் போது உரிய படிவங்களைப் பயன்படுத்தாமை. |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | வெளிநாட்டு பிரயாணம் தொடர்பாக அழைப்பிதழ், விண்ணப்பங்கள், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த கடிதங்கள் ஆகியவற்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் பேணப்பட்டிருக்காமை. |
| | | (ii) | மீண்டும் சேவைக்கு வந்தமையை அறிவிக்கும் கடிதம் ஒன்று வெளிநாட்டு பிரயாணக் கோவையில் அல்லது ஆளுக்குரிய கோவையில் காணப்படாமை. |